பக்கங்கள் 21

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 26 ஞாயிற்றுக்கிழமை 12.10.2025 | அதிர்வு 72

## பிரதமர் இன்று சீனா பயணம்



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சீன அரசின் அழைப்பின் பேரில் அவர்,

05▶



# கேவலமான முறையில் செயற்படும் பொலிஸார்

### விமல் வீரவன்ச கடும் சாடல்

"இலங்கையில் உள்ளது ஸ்ரீலங்கா பொலிஸா அல்லது ஜே.வி.பியின் பொலிஸா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. ஶ்ரீலங்கா பொலிஸ் மிகவும் கீழ்த்தரமான முறையில் செயற்படுகின்றது. எதிர்க்கட்சிகளுக்கு எதிரான அரசின் அடக்குமுறைகளின் பிரதானியாகவே பொலிஸ்மா அதிபர் செயற்படுகின்றார். வாக்குமூலத்தின் விடயங்களைப் பொலிஸ்திணைக்களம் வெளிப்படுத்தியமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது."

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

05▶

## அரசிடம் ஒப்படைத்த பாதுகாப்பு வாகனங்களை மீளவும் கோரியுள்ள மஹிந்தவும் மைத்திரியும்!

### உயிருக்கு அச்சுறுத்தலா என்று ஆராய்கின்றது பாதுகாப்பு மறு ஆய்வுக் குழு



முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் அரசிடம் ஒப்படைத்த அவர்களது பாதுகாப்பு வாகனங்களை மீளக் கோரியுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வாகனங்களை அரசிடம் ஒப்படைத்தமையால் அவர்களின் பாதுகாப்புக்கு ஏதேனும் அச்சுறுத்தல் காணப்படுமாயின் அந்த வாகனங்களை மீண்டும் வழங்க வாய்ப்புள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், முன்னாள் ஜனாதிபதிகளின் இந்த கோரிக்கையைப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள பாதுகாப்பு மறு ஆய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

04▶




ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவை எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனித்துச் சந்தித்துப் பேசுகின்ற – அளவளாவுகின்ற – சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போதெல்லாம் இப்போது புகார் புராணங்கள் பாடுவது பெரும்பாலும் ஒருவர் பற்றியதாகவே இருப்பதாகத் தெரிகிறது.

ஆளும் தரப்பின் சபை முதல்வராக – கொரடாவாக – நியமிக்கப்பட்டிருக்கும் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா பற்றிய முறைப்பாட்டுப் பட்டோலை தான் பெரும்பாலும் எதிரணி உறுப்பினர்களால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பையும் எதிர்க்கட்சிகளையும் சமாளித்து,

04▶



# முதலீடுகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது!

## அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

தற்போதைய அரசின் கீழ் முதலீட்டாளர்கள் மற்றும் நாட்டுக்கு வரும் முதலீடுகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் முதலீட்டு வாய்ப்புகள், வர்த்தக சூழல் மற்றும் சட்ட நிலைமைகள் குறித்து ஆய்வு செய்யும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவுடன் நேற்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதனைக் கூறினார்.



இலங்கையில் முதலீடுகளுக்குப் பாதுகாப்பான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது எனவும், முதலீடுகள் தொடர்பாக முந்தைய அரசுகளின் கீழ் இருந்த முறைகேடுகளை மாற்றி தற்போதைய அரசு ஜனநாயகக் கட்டமைப்புக்குள் புதிய சட்டங்களை உருவாக்கி வருகின்றது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது அரசின் முதன்மை நோக்கமாகும் என்றும், இதற்காக அரசு முதலீட்டு பாதுகாப்பை உறுதி செய்யும், முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்தும் மற்றும் வசதிகளை வழங்கும் என்றும், முதலீட்டு பாதுகாப்பு சட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த நாட்டு முதலீட்டு சூழலைப் பலப்படுத்துவதற்காக இனவாதம் மற்றும் மதவாதம் எனபவற்றை ஒதுக்கி தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல், செயற்றிறனான அரச சேவையை உருவாக்குதல், இராஜதந்திர உறவுகளை வெளிப்படையான முறையில் பராமரித்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் மூலம் தொழில்நுட்ப தடைகளைத் வெற்றி கொள்ளுதல் ஆகிய நோக்கங்களை அடைய அரசு செயற்பட்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அமெரிக்கத் தூதுக்குழுவிடம் மேலும் தெரிவித்தார்.

தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபொன்சு ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.





# ‘தொட்டலங்க கன்னா’வுக்கு ஆயுள் தண்டனை விதிப்பு!

போதைப்பொருள் கடத்தல்கார ரான “தொட்டலங்க கன்னா” என்பவருக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

“தொட்டலங்க கன்னா” என்பவர் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி 39.99 கிராம் ஹெரோயினு டன் பொலிஸாரால் கைது செய்யப்பட் டார்.

இதனையடுத்து ‘தொட்டலங்க கன்னா’ என்பவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோடு, நீதிமன்ற உத்தரவின் கீழ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

பிணையில் விடுதலை செய்யப்பட்டதை யடுத்து ‘தொட்டலங்க கன்னா’ என்பவர் பிரதேசத்தைவிட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாக இருந்துள்ளார்.

இந்நிலையில், ‘தொட்டலங்க கன்னா’ என்பருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களுடன் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்ட தையடுத்து, அவருக்கு எதிராக ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், தலைமறைவாக உள்ள ‘தொட்டலங்க கன்னா’ என்பவரைக் தேடி கண்டுபிடித்துக் கைது செய்து தண்டனைக் குட்படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.



# புதையல் தோண்டிய 4 பேர் மாட்டினார்கள்

அம்பாறை – இங்கினியாகல – கொக்னஹர பகுதியில் புதையல் தோண் டிய குற்றச்சாட்டில் 4 சந்தேகநபர்கள் இங்கினியாகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இங்கினியாகல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட சோதனை நட வடிக்கைகளின்போதே சந்தேகநபர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அம்பாறை பகுதி யைச் சேர்ந்த, 40, 47, 51 மற்றும் 57 வய துடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இங்கினியாகல பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

# மோ. சைக்கிளுடன் லொறி மோதிய விபத்தில் ஆண் ஒருவர் உயிரிழப்பு!

மோட்டார் சைக்கிளுடன் லொறி மோதிய விபத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து புத்தளம் – மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேலியகொடை – புத்தளம் வீதியில் கொடவெல சந்தி பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பேலியகொடையில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியில் வலது புறம் திரும்பும் போது, அதே திசையில் பயணித்த லொறி ஒன்று, மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில்




மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எவிபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் படுகாயமடைந்து, மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கட்டுனேரிய பகுதியைச் சேர்ந்த 59 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழில் வயோதிபப் பெண் ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அராலிப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் நேற்று தவறி கிணற்றில் வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அரியகுட்டி புவனேஸ்வரி (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதற்காக முயற்சித்த வேளை கால் தவறி கிணற்றினுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சாட்சிகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

ஒன்றுபடுத்தி, ஐக்கியமாக – இணக்கமாக – சுமுகமாக – அதிக குழப்பமின்றி – சபை நடவடிக்கைகளைக் கொண்டு நடத்துவதற்கு இந்த ஆளுங்கட்சி கொரடா பரவி முக்கியமானது.

நாடாளுமன்றத்தில் முறுகல் நிலையை வெளியே தெரியாமல் சமாளிக்கும் மிகப் பொறுப்பான பதவி இது. ஆனால் நாடாளுமன்றப் பெரும்பான்மை தம் வசமுள்ளது என்ற திமிர்த்தனத்தோடு இந்தப் பதவியில் இருப்பவர் நடந்து கொண்டால் சபை அமர்வுகள் தினந்தோறும் சண்டப் பிரசண்டமாக இருப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கா தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மாத்திரமன்றி, இந்திய தூதரக வட்டாரங்களும் கூட ஜனாதிபதிக்கு நீட்டுப்பட்டோலை கொடுக்கத் தவறவில்லை என்று தெரிகின்றது.

அதன் விளைவாகத்தான் துறைமுகங்கள், விமான நிலையங்கள், விமான சேவைகள் அமைச்சுக்களின் பொறுப்புகளிலிருந்து பிமல் ரத்நாயக்கா விலக்கப்பட்டிருக்கின்றார் என்று கருதப்படுகிறது. என் பத்தியை தவறாது வாசித்து வருகின்ற வாசகர்களுக்கு அதன் பின்புலம் நன்கு தெரியும் என்று நினைக்கிறேன்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் கீழ் பணியாற்ற வந்த பல அதிகாரிகள் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று தத்தமது பதவிகளை ராஜினாமாச் செய்து விட்டு ஓடுகின்ற நிலையும் தொடர்கின்றது.

இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர், இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர், தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம், இலங்கை ரயில்வேயின் மூத்த அதிகாரிகள் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்காவுடன் தாக்குப் பிடிக்க முடியாமல் பதவியை ராஜினாமா செய்து விட்டு ஓடிய மூத்த – மதிப்புக்குரிய – அதிகாரிகளின் பட்டியல் நீண்டது.

இப்போது அவரது அமைச்சில் ஊடகச் செயலாளராக இருந்த சுரங்க லக்மல் செனிவிரத்ன, அமைச்சர் பிமல் ரத்நாயக்காவுடன் தாக்குப் பிடித்துப் பணியாற்ற முடியாது என்ற கருத்துடன் தமது பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கு உள்ள மக்கள் செல்வாக்கை நிர்மூலமாக்கி, ஒரு கரை கண்ட பின்னர் தான் பிமல் ரத்நாயக்கா அடங்குவார் என்று தோன்றுகின்றது. பாவம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா. அமைச்சர் பிமல் ரத்நாயக்கா போன்றவர்களை தமது அமைச்சரவையில் வைத்துக் கொண்டு, இலங்கையின் போற்றப்படும் ஜனாதிபதியாக மாற வேண்டும் என்ற தனது கனவை அவர் கோட்டை விடப் போகின்றார் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

**அரசிடம் ஒப்படைத்த...**

முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை இரத்துச் செய்யும் சட்டம் காரணமாக அவர்கள் பயணித்த வாகனங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளிட்ட பல சலுகைகளை இழந்தனர். எனினும், இந்தச் சட்டம் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பிரதமர் இன்று...

ஒக்டோபர் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, பீஜிங்கில் "ஒரு பகிரப்பட்ட எதிர்காலம்: பெண்களின் முழுமையான வளர்ச்சிக்கான புதிய மற்றும் துரிதப்படுத்தப்பட்ட செயல்முறை" என்ற தலைப்பில் நடைபெறும் சீனா மற்றும் ஐ.நா. இணைந்து ஏற்பாடு செய்துள்ள பெண்கள் தொடர்பான உலகளாவிய தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய உரை நிகழ்த்துவார்.

சீன ஜனாதிபதிஷி ஜின்பிங் மற்றும் பிரதமர் லி கியாங் உள்ளிட்ட பல உயர்மட்டத் தலைவர்களையும் பிரதமர் ஹரிணி அமரசூரிய சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

## கேவலமான...

"பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் விசாரணை குறித்து பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் விடயங்களை ஊடகங்களுக்குப் பொலிஸ் திணைக்களம் பகிரங்கப்படுத்தியுள்ளமை இதுவே முதன்முறையாகும்.

தண்டனைச் சட்டக்கோவையின் 110 (3) பிரகாரம் ஏதேனும் வாக்குமூலம் குறித்து பொலிஸாருக்கு வழங்கும் வாக்குமூலத்தின் இரகசியம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இலங்கையில் உள்ளது ஸ்ரீலங்கா பொலிஸா அல்லது ஜே.வி.பியின் பொலிஸா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா பொலிஸ் கடந்த காலங்களில் இவ்வாறு செயற்பட்டதில்லை. மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் பொலிஸ் சேவையைப் பொலிஸ்மா அதிபர் அரசியல் மயப்படுத்தியுள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் தங்காலை பொலிஸார் என்னை அழைத்து வாக்குமூலம் பெற வேண்டிய அவசியம் கிடையாது.

அந்த நபருக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்பையே வெளிப்படுத்தினேன். ஊடகங்களுக்கு அதனையே வெளியிட்டேன்.

ஸ்ரீலங்கா பொலிஸ் மிகவும் கீழ்த்தரமான முறையில் செயற்படுகின்றது. எதிர்க்கட்சிகளுக்கு எதிரான அரசின் அடக்குமுறைகளின் பிரதானியாகவே பொலிஸ்மா அதிபர் செயற்படுகின்றார். அரசின் முறைகேடான செயற்பாட்டைத் தொடர்ந்து வெளிப்படுத்துவேன். பொலிஸாரைக் கொண்டு எம்மை அச்சுறுத்த முடியாது." – என்றார்.






# ஒரே நாள் அதிரடி வேட்டையில் 5 ஆயிரத்து 763 பேர் சிக்கினர்!

இலங்கையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 763 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பில் 24 பேரும், சந்தேகத்தின் பேரில் 696 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 329 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 174 பேரும்,மது போதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 27 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 24 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4 ஆயிரத்து 489 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.



# இலங்கையில் தினமும் 15 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிப்பு!

## மூவர் உயிரிழப்பு

இலங்கையில் தினமும் 15 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் எனவும், 3 பேர் உயிரிழகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெண்கள் வைத்திய பரிசோதனை மூலம் மார்பகப் புற்றுநோயை விரைவில் கண்டறிதல் மூலம் நோயைக் குணப்படுத்த முடியும் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கைப் பெண்களிடையே மார்பகப் புற்றுநோய் மிகவும் பொதுவான புற்றுநோயாகக் காணப்படுகின்றது. அதேவேளை, இந்த ஒக்டோபர் மாதம் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மாதாந்தம் சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும், 20 - 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும், 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் வருடாந்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றனர்.

பெண்கள் மார்பகத்தில் கட்டிகள், வலி அல்லது தோல் மாற்றங்களில் மாற்றங்கள் ஏற்பட்டால் ஆரம்பகால புற்றுநோய் கண்டறிதல் வைத்தியசாலைகளில் வைத்திய ஆலோசனையைப் பெறுமாறு சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பின்னடிப்பது ஏன்?

அதிகாரத்துக்கு வந்ததும் இயன்ற விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என வாக்குறுதி கொடுத்து, அதனடிப்படையில் ஆட்சியைக் கைப்பற்றி, அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தமது ஒரு வருட ஆட்சியின் முடிவின் பின்னரும், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து திட்டவட்டமான - தெளிவான - பதிலை அளிக்காமல் இழுத்தடித்து வருகிறார்.

தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த சமயம் இந்த வருடம் முடிவுக்குள் மாகாண சபைத் தேர்தல் உறுதியாக நடக்கும் என்று கூறிய அவர், இப்போது அதை அடுத்த வருடம் நடத்துவது பற்றி பேசுகிறார். அடுத்த வருடம் என்பது அடுத்த வருடம் இறுதிவரை - இன்னும் ஓராண்டு தாண்டியும் - செல்லக் கூடியது.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 60ஆவது அமர்வின் முடிவில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் முழு அமுலாக்கம் மற்றும் மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துதல் ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டிலும் ஆளும் கட்சியைத் தவிர்ந்த, பிற கட்சிகள் அனைத்துமே மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு வெளிப்படையாக அரசை வலியுறுத்தியுள்ளன.

இவ்வாறு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பலத்த அழுத்தங்கள் வந்தும் கூட மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க முடியாமல் ஆளும் தரப்பு தள்ளாடுவதற்கு, நடந்து முடிந்த மூன்று தேர்தல்களின் தமிழர் தாயக முடிவுகள் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றன.

தெற்கில் மூன்று தேர்தல் முடிவுகளும் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு சார்பாக அமைந்திருந்தாலும், வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - மூன்று தேர்தல் முடிவுகளும் மூன்று விதமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றன.

தமிழர் தாயகத்தில் ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸநாயக்கவினால் வெற்றி பெற முடியவில்லை. பெரும்பாலான இடங்களில் சஜித் பிரேமதாஸாவே வென்றார்.

அதைத் தொடர்ந்து நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தை தவிர்ந்த பிற இடங்களில் அநுர குமார திஸநாயக்கவின் செல்வாக்கை - பிரபல்யத்தை - முன்வைத்து தேசிய மக்கள் சக்தி வென்றது.

ஆனால் அடுத்து வந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழர் தேசத்தில் மீண்டும் தேசிய மக்கள் சக்தியை பின்தள்ளி தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்னிலைக்கு வந்தன.

இந்தப் போக்குதான் ஆளுந் தரப்பைக் கதிகலங்க வைத்திருக்கின்றது. இப்போது மாகாண சந்த் தேர்தலை நடத்தினால் வடக்கு, கிழக்கில் தங்கள் செல்வாக்கு முழுமையாகப் பறிபோய்விடும் என்பதை உணர்ந்து கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி, அதன் காரணமாகத்தான் அந்தத் தேர்தலை நடத்தாமல் பின்னடித்து வருகின்றது.

ஆனால், அப்படி பின்னடித்து நிலைமையை ஆளும் தரப்பு மேலும் மோசமாக்குமானால், வடக்கு - கிழக்கில் மட்டுமல்லாமல், ஏனைய மாகாணங்களிலும் அதன் ஆதரவு சரிந்து, அதன் வெற்றி வாய்ப்பு கேள்விக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# சரசாலை முன்பள்ளி சிறுவர் தின நிகழ்வு







(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் சரசாலை உபபணிமனையின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை சரசாலை உப மணிமனைக்கு உட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.


பிரதேச சபையின் சரசாலை உபபணி மனையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் த.கபிலன் கலந்து கொண்டார்.

2026 ஆம் ஆண்டில் முதலாம் தரத்துக்குச் செல்லவுள்ள மாணவர்களுக்கான வங்கிக் கணக்கினை ஆரம்பித்து மாணவர்களிடம் வங்கிப் புத்தகங்களைக் கையளித்திருந்தார்.

நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் பொ.குகதாசன், பிரதேச சபைச் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# ‘தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்’ நூல் அறிமுக நிகழ்வின் யாழ்ப்பாணத்தில்




பத்திரிகையாளர் வீரகத்தி தனபால சிங்கம் எழுதிய “தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்” நூல் அறிமுக நிகழ்வு யாழ்நகர் தந்தை செல்வா கலையரங்கில் ஒக்டோபர் 18 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையில் இடம்பெறவிருக்கிறது.

இந்த நிகழ்வில் கலாநிதி சிவகுமார் சுப்பிரமணியம் (பொறியியலாளர்), உளநல மருத்துவர் வைத்தியர் எஸ். சிவதாஸ், மூத்த பத்திரிகையாளர் அனந்த் பாலகிட்ணர், சமூக, அரசியல் செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வாளருமான கருணாகரன் சிவராஜா ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

இந்த நூல் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் வெளியீடாகும்.



# முத்துநகர் விவசாயிகள் கைது!




திருகோணமலை முத்து நகர் விவசாயிகளை சீனக் குடா பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இந்த விவசாயிகள் முத்து நகர் வயல் நில பகுதியின் சூரிய மின் சக்திக்கு ஒதுக்கப்பட்ட காணியை விடுத்து, அண்மித்த காணியில் உழவு இயந்திரத்தைக் கொண்டு விவசாய நடவடிக்கைக்காக தரையை பதப்படுத்தும் போது, அத்துமீறி தனியார் காணிக்குள் நுழைந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டனர் எனத் தெரியவருகிறது.

இதில் ஐந்துக்கும் மேற்பட்ட விவசாயிகளின் உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிள் உள்ளிட்டவற்றையும் பொலிஸார் கையகப்படுத்தினர் எனத் தெரியவருகிறது.

அண்மையில் தமது விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டன எனத் தெரிவித்து தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முத்துநகர் விவசாயிகள் நடாத்தி வருகின்றனர். தற்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ள காணி தனியாருடையதுஎனவும், உரக்கம்பனிஒன்றுக்கு சொந்தமானது எனவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டமையையடுத்து இந்தக் கைது சம்பவம் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

நாடாளுமன்றிலும் ஊடகங்களிலும் முத்து நகர் விவசாயக் காணி சர்ச்சை பேசு பொருளாகியுள்ள நிலையில் எஞ்சிய காணியில் விவசாயம் செய்யலாம் என ஆளுங் கட்சி பிரதியமைச்சர் பேசியமையால் நெற் செய்கைக்கான தயார்படுத்தலை தாங்கள் மேற்கொண்டனர் என விவசாயிகள் தெரிவித்தனர்.





# கிரான் தரவை மாவீரர் துயிலுமில்லத்தை தூய்மைப்படுத்தும் பணிமுன்னெடுப்பு!

(பழுவூரான்)

நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தரவை மாவீரர் துயிலுமில்லத்தைத் துப்புரவு செய்யும் பணிகள் தரவை மாவீரர் துயிலுமில்ல நிருவாகத்தினரால் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தரவை மாவீரர் துயிலுமில்ல நிர்வாகத்தின் உபதலைவர் பூ.மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இத்துப்புரவுப் பணியில், இந்தத் துயிலுமில்ல நிருவாகத்தின் கணக்காய்வாளர் எஸ். அரவிந்தன் மற்றும் நிர்வாகத்தின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இத்தூய்மைப்படுத்தலின் ஆரம்பத்தில் மாவீரர் ஒருவரின் தாயாரினால் நினைவுச் சுடரேற்றப்பட்டு, வருகை தந்தவர்களால் மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து துப்பரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மாவீரர் துயிலுமில்ல நிருவாகத்தினர் தெரிவித்ததாவது:-

துயிலுமில்லங்களை யாரும் நிதி திரட்டும் செயற்பாடுகளாக மாற்ற வேண்டாம். இது மாவீரர் தாய்மார், அவர்களின் குடும்பங்களுக்கான விடயங்கள். இதனை அவர்களே பார்த்துக் கொள்வார்கள். எனவே மற்றவர்கள் இதனை வைத்து நிதி திரட்டல்களை மேற்கொள்ளாதீர்கள். இவர்களுக்கு நிதி வழங்குபவர்களும் இதனை நிறுத்த வேண்டும்.

இது இதயபூர்வமாகச் செய்கின்ற விடயம். இதனை காசாக மாற்ற வேண்டாம்.

அத்தோடு இங்கு யாரும் வரலாம். இது யாரும் தனித்து உரிமை கொண்டாடும் விடயமல்ல. அனைவரும் வரலாம். ஆனால் இதனை அரசியலாக்க வேண்டாம்.

இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு எமது மாவீரச் செல்வங்களுக்காகதங்கள்அஞ்சலியினைசெலுத்த இதயபூர்வமாக வருமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். – என்று தெரிவித்தனர்.





# காசாவில் நடந்த விடயங்களைப் பேசும் நாடுகள் செம்மணியில் நடந்தவற்றைப் பேச மறுப்பதேன்?

## கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம் விசனம்




(வாலகிருஸ்ணா)

காசாவில் நடந்த விடயங்களை எத்தனையோ நாடுகள் பேசுகின்றன. ஆனால் இங்கு எமக்கு நடந்த – செம்மணியில் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு நடந்த – விடயங்களை ஏன் சர்வதேசம் பேச மறுக்கின்றது? இங்கு நடந்தவை தொடர்பில் ஒரு சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதற்கு சர்வதேச நாடுகள் வலியுறுத்துவதற்கு முன்வராமலிருப்பது எங்களுக்கு மனவேதனையை அளிக்கின்றது என கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின குற்றஞ்சாட்டியுள்ளனர்.

செம்மணி மனித புதைகுழியானது தமிழின அழிப்பின் அடையாளம் எனவும், அங்கிருந்த நினைவுச்சுடர் ஏற்றும் தூபி உடைக்கப்பட்டமை இந்த நாட்டின் இனவாத முகத்தைக் காட்டி நிற்பதாகவும் அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்றுக் காலை கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஊடக சந்திப்பு நடைபெற்றது. அதில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் தலைவிகள் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி கூறியவை வருமாறு:-

கடந்த மே மாதம் ஐ.நா. ஆணையாளர் இலங்கைக்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களை சந்திவிட்டு சென்றார். அதே நேரம் செம்மணியில் சிதைக்கப்பட்டு புதைக்கப்பட்ட மக்களின் எழும்புக்கூடுகள் தோண்டப்பட்ட நிலையில் “அணையா விளக்கு” என்னும் நினைவுத் தூபியை அமைத்து பாதிக்கப்பட்ட மக்களாக வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் இணைந்து அங்கு அணையா விளக்கு போராட்டத்தினையும் முன்னெடுத்திருந்தனர். அங்கு ஐ.நா. ஆணையாளரும் வந்து வணங்கிச் சென்றிருந்தார்.

அதேபோன்று கடந்த மாதம் 25ஆம் திகதி தொடக்கம் முதலாம் திகதி வரையில் செம்மணிக்கு நீதிகோரிய வகையில் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டஉறவுகளினால்அடையாளஉண்ணாவிரதப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. அந்த நினைவுத் தூபியானது இனவாதிகளினால் கடந்த 09ஆம் திகதி உடைத்து நொறுக்கப்பட்டுள்ளது. செம்மணியில் புதைக்கப்பட்ட ஆத்மாக்களுக்குக் கூட நீதி கிடைக்கக்கூடாது என்ற நோக்குடன் அங்கு அமைக்கப்பட்டிருந்த சிறிய நினைவுத்தூபியைக்கூட வைத்து எமக்கான நீதியை கோரமுடியாத நிலையே இந்த அரசின் காலகட்டத்திலும் ஏற்படுகின்றது.

எமது போராட்டத்திற்கு வந்த ஐ.நா. ஆணையாளர் எமது வலியை புரிந்து கொள்கிறார் எனவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று கூறிச்சென்ற நிலையில் தற்போதைய ஐ.நா. அமர்வில் வெளிவந்திருக்கின்ற அறிக்கையானது பாதிக்கப்பட்ட மக்களாகிய எங்களுக்கு பாரிய ஏமாற்றத்தையே தந்துள்ளது.

கடந்த காலத்திலிருந்த அரசுகளுக்கு வழங்கியதுபோன்று தற்போதுள்ள அரசுக்கும் கால அவகாசத்தை வழங்கியிருக்கின்றார்கள். மீண்டும் உள்ளக பொறிமுறையைத் திணித்திருக்கின்றார்கள். சர்வதேச தரத்திலான விசாரணையொன்று வேண்டும் என்றே பாதிக்கப்பட்ட மக்களாக நாங்கள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். இந்தநிலையிலேயே தற்போது வெளிவந்துள்ள அறிக்கை ஏமாற்றமளிக்கின்றது.

இந்த அநுர அரசாங்கத்தை நம்பிய ஐ.நா. சபை எங்களுக்குப் பாராமுகமாக இவ்வாறான விடயத்தைச் செய்திருப்பது எங்களுக்கு மிகவும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசாங்கம் இரண்டு முகங்களை காட்டிநிற்கின்றது. சர்வதேச நாடுகளிடம் ஒரு முகத்தைக் காட்டுகின்றது, இலங்கைக்கு வந்து ஒரு முகத்தைக் காட்டுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும். பொறுப்புக் கூறவேண்டும் என்ற எண்ணப்பாடு இல்லாத நிலையிலேயே இந்த அரசாங்கமும் செயற்பட்டு வருகின்றது.

இந்த அரசாங்கம் செம்மணி புதைகுழி விடயத்திலும் சரியான கரிசனை காட்டியதாக இல்லை. அதேபோன்று தையிட்டியில் தனியார் காணியில் விகாரை அமைத்த விடயத்திலும் எந்தக் கரிசனையும் காட்டப்படவில்லை.

இந்த 17வருடத்தில் எங்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் இந்த அரசாங்கத்தின் மீது எந்த நம்பிக்கையின் கீழ் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளக பொறிமுறையின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களை கொண்டு சென்றுள்ளதை எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது. சர்வதேச தரத்திலான ஒரு நீதிவிசாரணையே எங்களுக்கு தேவையென நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம்.

இங்கும் சில குழுக்களாக பிரிந்து கொண்டு சகோதர இனத்திற்கு நடந்ததும் எங்களுக்கு நடந்ததும் ஒரு சமநிலையான போர்க்குற்றம் என்ற நிலைக்குள் கொண்டு வருகின்றார்கள். எங்களுக்கு நடந்தது வேறு. அவர்களுக்கு நடந்தது வேறு. அவர்களுக்கு நடந்தது ஒரு குற்றச்செயல். தமிழ் மக்களுக்கு நடந்தது திட்டமிட்டு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டதும் திட்டமிட்ட இனஅழிப்பும் ஆகும். அதனையும் இதனையும் சில குழுக்கள் சமநிலைப்படுத்தி சர்வதேசத்திற்கு கொண்டு சென்றுள்ளன.

சில தூதரகங்கள் கூட எங்களது இந்தப் போராட்டம், எங்களது வலியை, நீதி கேட்கும் படலத்தினை மழுங்கடிக்கும் வகையில் கொண்டு செல்கின்றனர். எங்களது போரட்டத்திற்குச் சரியான தீர்வுத் வரவேண்டும்.

இவ்வாறான அநீதிகள் இனிமேல் நடக்காமல் இருக்க வேண்டுமாக இருந்தால் இந்தக் குற்றவாளிகள் இனங்

தொடர்ச்சி▼

# காசாவில் நடந்த விடயங்களைப் பேசும் நாடுகள் செம்மணியில் நடந்தவற்றைப் பேச மறுப்பதேன்?

## கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம் விசனம்

தொடர்ச்சி▲

காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். எமது மக்களுக்கான அநீதி இலங்கை அரசாங்கத்தினால் நடத்தப்பட்டுள்ளமை என்பதற்கான பொறுப்புக் கூறல் இந்த அரசாங்கத்திற்கும் இருக்க வேண்டும். அவ்வாறான நிலையிலேயே இந்த அநியாயங்கள் மீளவும் நிகழாமல் இருக்கும். இந்தப் பொறுப்புக் கூறல் விடயத்தை இந்த அரசாங்கம் மாத்திர மல்ல, எந்த அரசாங்கள் வந்தாலும் தட்டிக் கழித்தே வருகின்றார்கள். தங்கள் இருப்புகளைத் தக்க வைப்பதற்கும், இனவாத அரசியலை முன்னெடுத்து வருகின்றார்கள்.

தற்போது வந்திருக்கும் ஐ.நா அறிக் கையிலும் வழங்கப்பட்டிருக்கும் கால நீடிப் பானது எமக்கு நடந்திருக்கும் இன அழிப் பினை சாதாரண ஒரு நிலைப்பாடாக முடித்து வைப்பதற்கான மென்போக்கு செயற்பாடாகவே நாங்கள் கருதுகின் றோம். எனவே இவ்வாறு முயற்சிப் பவர்கள் இதனை நிறுத்திக் கொள்ள வேண்டும்.


ஒரு சிலர் தங்களுக்குத் தேவையான நிதி வளத்தை ஈட்டிக் கொள்வதற்காக எங்கள் வலிகளோடு விளையாடுகின் றார்கள். எங்கள் உறவுகளை இழந்து நாங்கள் வேதனையில் இருக்கின்றோம். இறப்பது என்பது ஒரு வகையான விடயம். ஆனால் எங்கள் உறவுகள் இருக்கின் றார்களா, இல்லையா என ஏங்கி நாங் கள் ஒவ்வொரு நாளும் அணுஅணு வாகச் செத்துக் கொண்டிருக்கின் றோம். இந்த நிலை ஏன் சர்வதேசத்திற்கு விளங்குவதில்லை?

காசாவில் நடந்த விடயங்களை எத்தனையோ நாடுகள் பேசுகின்றன. ஆனால் இங்கு எமக்கு நடந்த, செம்மணி யில் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு நடந்த விடயங்களை ஏன் சர்வதேசம் பேச மறுக்கின்றது? இதற்கான ஒரு சர்வ தேச விசாரணையை முன்னெடுப்பதற்கு சர்வதேச நாடுகள் வலியுறுத்துவதற்கு முன்வராமலிருப்பது எங்களுக்கு மன வேதனையான விடயம்.

தற்போது வெளியாகியுள்ள ஐ.நா அறிக்கையில் சில நல்ல விடயங்கள் இருந்தாலும் எங்களைப் பொறுத்தவரை யில் ஏற்றுக் கொள்ளவே முடியாது. நாங் கள் சரவதேச விசாரணை ஒன்றையே கோரிக் கொண்டிருப்போம். தற்போது இரண்டு வருட கால நீடிப்பு வழங்கப் பட்டுள்ளது. இந்த இரண்டு வருடங்கள் முடிவுறும் போது நாங்கள் இருப்போமோ தெரியாது. இவ்வாறு ஒவ்வொரு அரசாங் கங்கள் மாறும் போதும் அவர்களுக் குக் கால நீடிப்பை வழங்கி பொறுப்புக் கூறலில் இருந்து அவர்களைக் காப் பாற்றி வருவதே ஐ.நா. செயற்பாடாக இருக்கின்றது. இந்த நிலையை மாற்றி இந்த அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தி நீதியான சர்வ தேச விசாரணையின் ஊடாக எமக்கான ஒரு தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு ஐ.நா முன்வர வேண்டும். - என்றார்.

# காத்தான்குடி,ஏறாவூர்,மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பிரிவுகளில் ஐஸ், ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரிகள் நால்வர் கைது






(கனகராசா சரவணன்)

காத்தான்குடி, ஏறாவூர், மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பிரிவுகளில் 25 கிராம் ஐஸ் மற்றும் 310 மில்லி கிராம் ஹெரோ யின் போதைப் பொருள்களுடன் 4 வியா பாரிகளை நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு தாங்கள் கைது செய்துள் ளனர் என அந்தந்தப் பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் நேற்று முந்தி னம் இரவு 10.00 மணியளவில் காத்தான் குடி பொலிஸ் பிரிவிலுள்ள மஞ்சந் தொடுவாய் பகுதியில் வியாபாரத்துக்கு என போதை பொருளை எடுத்துச் சென்ற 33 வயதுடைய ஒருவரை 10 கிராம் 150 மில்லி கிராம் ஐஸ் போதை பொருளுடன் தாங்கள் கைது செய்துள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித் தனர்.

அதேவேளை மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஏறாவூர் பிரதேசத்தில் 15 கிராம் 660 மில்லி கிராம் ஐஸ் போதை பொரு ளுடன் வியாபாரி ஒருவரை கைது செய் தனர்.

மட்டக்களப்பு மங்களராம விகாரை யில் தங்கியிருந்து கல்லடி பாலத்துக்கு அருகில் கடலை வண்டிலில் கடலை வியாபாரம் செய்து வந்த கடுகன்னாவை யைச் சேர்ந்த 29 வயது இளைஞன் ஒருவரை 140 மில்லி கிராம் ஹெரோ யின் போதை பொருளுடன் கைது செய் யப்பட்டார்.

இவ்வாறு கடந்த 4 வருடங்களாக விகாரையில் தங்கியிருந்து வீடுகளில் சரிந்து வளர்ந்து வரும் தென்னை மரங் களை இரும்பு கம்பி கேபிள் இழுத்து கட்டி வரும் நடமாடும் சேவையில் ஈடுபட்டு வரும் அல்பிட்டியைச் சேர்ந்த ஒருவரை 170 மில்லி கிராம் ஹெரோயின் போதை பொருளுடன் பொலிஸார் கைது செய் தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வியா பாரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத் துவதற்கான நடவடிக்கைகளை அந்த அந்த பொலிஸ் நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கிய இராணுவத்தினர்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் இரத்த வங்கியில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இலங்கை இராணுவத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவு முன்னிட்டு இராணுவத்தினர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரத்ததானம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்த வங்கியில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நோயாளிகளின் நலனையும் கருத்தில் கொண்டும் முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை வைத்தியசாலையின் முக்கியமான சூழ்நிலையில் இந்த நிகழ்வை அவர்கள் நடத்தியிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்தியர் சசினி விஜயரத்ன, வைத்தியர் எஸ்.டீ.சமரசிங்கவின் பரிசோதனையின் கீழ், 100 இரத்த தானம் செய்பவர்களின் பங்கேற்புடன் முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை வைத்தியசாலையிலுள்ள இரத்த வங்கியில் இரத்த தானம் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு 59 ஆவது காலாட் படை பிரிவின் வழிகாட்டுதலின் இராணுவ முகாம்களுக்கு கீழுள்ள குறித்த இரத்த தானம் வழங்கும் நிகழ்வில் 59 ஆவது காலாட் படை தலைமைச் செயலகம், 591 ஆவது படையணி தலைமைச் செயலகம், 12 ஆவது இலங்கை இராணுவ காலாட் படை, 10 ஆவது சிங்ஹ படையணி, 5 ஆவது சிங்க படையணி, 14 ஆவது கெமுனு ஹேவா படையணி, 593 ஆவது படையணி தலைமைச் செயலகம், 6 ஆவது கெமுனு ஹேவா படையணி , 6 ஆவது தேசிய பாதுகாப்பு படையணி போன்ற படையணியை சேர்ந்த இராணுவத்தினர்கள் பலரும் கலந்து கொண்டு இரத்த தானத்தை வழங்கியிருந்தார்கள்.










# காரைதீவு இராணுவத்தினரின் முகாம் 38 வருடங்களின் பின்பு மூடப்பட்டது

## காணிகள், கட்டடங்கள் கையளிக்கப்பட்டன

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த 38 வருடங்களாக காரைதீவு பிரதான வீதியில் நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மூடப்பட்டது.

அங்கிருந்த காரைதீவு பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் மற்றும் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்கள், காணிகள் உரியவர்களிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் கல்முனை கட்டளைத் தளபதி அதற்கான உரிய ஆவணங்களை பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை தவிசாளரிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இங்கு நிலைகொண்டிருந்த சுமார் 50 இராணுவத்தினர் கல்முனை இராணுவ முகாமிற்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

காரைதீவு கிராமம் கடந்த 1985, 1988, மற்றும் 1990 களில் பாரிய வன்முறைக்கு இலக்காகி பாரிய அழிவைச் சந்தித்திருந்தமை தெரிந்ததே.

அதனால் 1988களில் இருந்து அங்கு இராணுவம், விசேட அதிரடிப் படை, இந்திய அமைதிகாக்கும் படை

தொடர்ச்சி▼

















# காரைதீவு இராணுவத்தினரின் முகாம் 38 வருடங்களின் பின்பு மூடப்பட்டது

## காணிகள், கட்டடங்கள் கையளிக்கப்பட்டன

தொடர்ச்சி▲

மற்றும் உளவு பிரிவினர் மாறி மாறி தொடர்ச்சியாக தங்கி வந்தனர்.

நேற்று முன்தினம் மாலை உடன் இந்த இராணுவ முகாம் பூரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

இருந்த பொழுதிலும் தேசியப் புலனாய்வு பிரிவினர் மற்றும் 3 இராணுவத்தினர் இன்னும் ஒரு வார காலத்திற்கு அங்குள்ள இடத்தில் தங்கி இருப்பார்கள் என்று கூறப்படுகின்றது .

இது தொடர்பாக காரைதீவு பிரதேச செயலாளர் எந்திரி ஜி.அருணன் கூறுகையில் –

கரைதீவு இராணுவ முகாம் அகற்றப்படுவது தொடர்பாக கல்முனை பிராந்திய கட்டளை தளபதி எங்களை நேற்று வெள்ளிக்கிழமை மாலை அழைத்து எங்களிடம் அந்த பத்திரங்களை கையளித்தார் . புலனாய்வு பிரிவினரும் விரைவில் அகன்று விடுவார்கள். – என்றார்.

**மக்களின் கருத்து**

இதேவேளை ”காரைதீவு இராணுவ முகாம் அகற்றப்பட்டிருக்கக் கூடாது .எமக்கு பாதுகாப்பு இல்லை. எனவே பொலிஸாரோ யாரோ அங்கு நிலை கொள்ள வேண்டும்” என்று ஒரு சாரார் கருத்து தெரிவிக்கின்றனர்.

இன்னும் சிலர் “இந்த முகாம் அகற்றப்படுவதனால் பிரதேச சபைக்குரிய வருமானம் அதிகரிக்கும். பிரதேச செயலகத்தின் ஒருபகுதி இங்கும. இயங்கலாம். பிரதேச சபை வருமானம் ஏற்பாடுகளையும் செய்து கொள்ளலாம்” / என்றும் தெரிவித்தனர்.










# செம்மணி புதைகுழி விவகாரத்தை அரசே இழுத்தடிக்க முயல்கிறதா?



- துலாபரன் புலந்தரராசா -

செம்மணி–சித்துபாத்திமனிதபுதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுக் பணிகளை மேற்கொள்வதில் தாமத நிலை ஏற்பட்டுள்ளது. நீதிமன்றம் இது தொடர்பில் கரிசனையுடன் செயல்படுகின்ற போதும் அரசாங்கத்தின செயற்பாடுகள் தாமத நிலையை ஏற்படுத்தியுள்ளன. செம்மணி – சித்துபாத்தி மனித புதைகுழியின் அகழ்வுப்பணிகளுக்கு நிதி கிடைக்காமையால் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் 13ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி மூன்றாம் கட்ட அகழ்வுப் பணி தொடர்பில் யாழ் மாவட்ட நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுததுக் கொள்ளப்பட்ட போதும் அகழ்வுக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறாமையால் அவ்வழக்கு 13ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

செம்மணி சித்துபாத்தி மனித புதைகுழியில் ஏற்கனவே இரண்டு கட்டமாக அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுள்ளன. செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இரண்டு கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் 239 எலும்புக் கூடுகளும், 72 சான்றுப் பொருள்களும் கிடைத்துள்ளன. மேலும் அப்பகுதியில் மனித எலும்புக்கூடுகள் இருக்கின்றன சந்தேகம் ஏற்பட்ட நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியை மேற்கொள்ள தீர்மானிக்கப் பட்டிருந்தது. இந்த அகழ்வுப் பணியை மேலும் 8 வார காலம் மேற்கொள்ள சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றத்திடம் அனுமதி கோரியிருந்த போதும், அதற்கான பாதீடு அரசாங்கத்தால் ஒதுக்கப்படாமையால் வழக்கு திகதியிடப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தில மனித உரிமை மீறல்கள், போர்குற்றங்கள் இடம்பெற்றமைக்கான அதாவது இனப்படுகொலைக்கான ஒரு சாட்சியாக செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியும் உள்ளது என பாதிக்கப்பட்ட தமிழ் தேசிய இனம் கூறி வரும் நிலையில, அந்த விசாரணைகளை துரிதப்படுத்தி அகழ்வுகளை மேற்கொள்ள அரசாங்கம் அதிக சிரத்தை காட்டாது காலத்தை இழுத்தடித்துச் செல்கின்றமை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

செம்மணி விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கத்திடம் தடயப் பொருள்கள் மட்டுமன்றி சாட்சியமளிக்க தயாரான படைத் தரப்பை சேர்ந்தவர்களும் உள்ளனர். குறிப்பாக மாணவி கிருசாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை கைதியாகவுள்ள இராணுவ கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷ செம்மணியில் 300- 400 பேர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் முன்னர் தெரிவித்து இருந்ததுடன், செம்மணி புதைகுழி குறித்து சாட்சியமளிக்கதான் தயார் என அவர் தனது மனைவி ஊடாக ஜனாதிபதி அநுரகுமர திஸாநாயக்காவுக்கு கடிதம் மூலமும் தெரிவித்துள்ளார். அவரது கருத்துக்கள் அங்கு இடம்பெற்ற மனிதப் படுகொலைக்கான சாட்சியமாகவுள்ளது. அவரது சாட்சியங்களின் அடிப்படையில் அதனுடன் தொடர்புடையவர்கள், அவர்களுக்கு கட்டளை பிறப்பித்தவர்கள் எனப் பலரை இனங்காணக் கூடியதாக இருக்கும். இலங்கை அரச படைகளின் வன்மத்தையும், அவர்களது கொடூர வெறியாட்டத்தையும் அதன் மூலம் வெளிப்படுத்த முடியும்.

செம்மணி சித்துபாத்தி மனித புதைகுழி உள்ளூரில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுதியுள்ளது. ஐ.நாவிலும் அது பேசு பொருளாக மாறியிருந்தது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் பிரிட்டன் இது தொடர்பில் கரிசனை செலுத்தி நீதியான முறையில்அகழ்வுப் பணி இடம்பெறுவதுடன், நீதியான முறையில் விசாரணைகள் இடம்பெற வேண்டியதை வலியுறுத்தியும் இருந்தனர். வலிந்து காணாமல் போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 29 ஆவது அமர்வில் இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் விவகாரத்தில் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால், ஐ.நாவில் கருத்து தெரிவித்து 10 நாள்கள் கடப்பதற்கு முன்னரே செம்மணி வழக்கு மீண்டும் திகதியிடப்பட்டு அகழ்வுப் பணி தாமதமாகியுள்ளது.

நாட்டில் குறிப்பாக தென்னிலங்கையில் ஊழலுக்கு எதிராகவும், போதைப் பொருள் மாபியாவுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ள அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தின் மாறாத வடுவாகவுள்ள செம்மணி சித்துபாத்தி விவகாரத்திலும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும். அதுவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க உதவும். கடந்த கால தமிழ் அரசியல் தலைமைகள் மீது கொண்ட வெறுப்பால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கும் கணிசமான வாக்குகளை வழங்கியிருந்தனர். தென்னிலங்கை கட்சிகள் வடக்கு – கிழக்கில் இதுவரை பெற்றிராத வெற்றியை தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றிருந்தது. அது அநுர அலையாக வந்த வாக்கு எனினும், வாக்களித்த தமிழ் மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் காப்பாற்ற வேண்டும். அதற்கு குறைந்தபட்சம் செம்மணி சித்துபாத்தி லிவகாரததை என்றாலும் மனிதநேயத்துடன், இதயசுத்தியுடனும் கையாண்டு பாதிகப்பட்ட மக்களுக்கு நீதியைப பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்.

# திருமாவளவன் சென்ற கார் வழிமறிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்க!

## ம.நீ.ம தலைவர் கமல்ஹாசன் தெரிவிப்பு





திருமாவளவன் சென்ற கார் வழிமறிக்கப்பட்ட விவகாரம் குறித்து பொலிஸார் விசாரணையை வேகப்படுத்த வேண்டும் என்று ம.நீ.ம தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி சென்னை உயர் நீதின்றம் அருகே ஓர் ஆர்ப்பாட்டத்தில் விசிக தலைவர் திருமாவளவன் பங்கேற்று திரும்பியபோது, அந்த வழியாக சென்று கொண்டிருந்த ஸ்கூட்டர் ஒன்று திருமாவளவன் சென்ற காருக்கு குறுக்கே வந்துள்ளது. அப்போது, அந்த ஸ்கூட்டரில் வந்த நபர், அவரது வாகனத்தை நிறுத்திவிட்டு தகாராறு செய்துள்ளார். இரு தரப்புக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இந்த விவகாரம் குறித்து திருமாவளவன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், உயர் நீதிமன்றம் அருகே தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்பு கடந்த ஒக்டோபர் 7 அன்று எனது காரை வழி மறித்த நிகழ்வு 'தற்செயலாக நடந்தது அல்ல, திட்டமிட்ட சதி' என்பது தெரிய வருகிறது. ஆர்எஸ்எஸ் மற்றும் பா.ஜ.க.வினர் இதன் பின்னணியில் உள்ளனர் என்றும் எமது விசாரணையில் உறுதிபட தெரிகிறது.

எனவே, தமிழ்நாடு அரசு இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து தீவிரமாக விசாரித்திட வேண்டும். பின்னணியில் உள்ள சதியைக் கண்டறிய வேண்டும். அத்துடன், உடனடியாக இதனை ஒளிபரப்புச் செய்த தனியார் தொலைகாட்சிகளைச் சார்ந்தவர்களையும் முழுமையாக விசாரித்திடவேண்டுமென கோருகிறோம்.- எனத் தெரிவித்திருந்தார்.

திருமாவளவனின் பதிவைப் பகிர்ந்த இயக்குநர் பா.ரஞ்சித், 'உயர் நீதிமன்றம் அருகே தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்பு கடந்த ஒக்ரோபர் 7 அன்று காரை வழிமறித்த நிகழ்வு 'தற்செயலாக நடந்தது அல்ல. திட்டமிட்ட சதி' என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார். இதைக் கவனத்தில் கொண்டு தமிழக அரசு அவருக்கு உடனடியாக பாதுகாப்பு வழங்கிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இயக்குநர் ரஞ்சித்தின் பதிவை பகிர்ந்துள்ள மக்கள் நீதி மையம் கட்சியின் தலைவரும் மாநிலங்கள் எம்.பியுமான கமல்ஹாசன், 'தம்பி திருமாவின் சந்தேகம் நியாயமானது. இன்னொரு தம்பி பா.ரஞ்சித்தின் அக்கறை உண்மையானது. தம்பி திருமாவளவன் சென்ற கார் வழிமறிக்கப்பட்ட விவகாரம் குறித்து பொலிஸ் விசாரணையை வேகப்படுத்த வேண்டும். அவரது பாதுகாப்பை அதிகரிக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்யவேண்டும்.- என்றார்.

# ஒடிசாவைச் சேர்ந்த மருத்துவ மாணவி மீது மேற்கு வங்கத்தில் கூட்டு வல்லுறவு!



மேற்கு வங்கத்தின் பஸ்சிம் பர்தமான் மாவட்டத்தில் உள்ள மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயின்று வரும் ஒடிசாவைச் சேர்ந்த மாணவி, கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து பொலிஸ் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளது.

ஒடிசாவின் ஜலேஸ்வர் பகுதியைச் சேர்ந்த மாணவி, பஸ்சிம் பர்தமான் மாவட்டத்தின் துர்காபூரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறார். இவர், இரவு உணவு உட்கொள்வதற்காகத் தனது நண்பர் ஒருவருடன் வெளியே சென்றுள்ளார். அப்போது அடையாளம் தெரியாத நபர்களால் அவர் பாலியல் வனகொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பொலிஸார்,

"மருத்துவக் கல்லூரி மாணவி இரவு உணவு உட்கொள்ளத் தனது நண்பருடன் வெளியே சென்றபோது இந்த சம்பவம் நடந்துள்ளது என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். தற்போது அந்த மாணவி, அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்ப உறுப்பினர்கள் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் நாங்கள் விசாரணையைத் தொடங்கி உள்ளோம்.

நேற்று வெள்ளிக்கிழமை (10) இரவு அந்த மாணவி தனது நண்பருடன் வெளியே சென்றது ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது. அடையாளம் தெரியாத மூன்று ஆண்கள் அங்கு வந்தபோது உடன் வந்த நண்பர், மாணவியை தனியாக விட்டுவிட்டுச் சென்றுள்ளார். அந்த நபர்கள், மாணவியின் தொலைபேசியைப் பறித்துக் கொண்டு வளாகத்துக்கு வெளியே உள்ள ஒரு காட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து யாரிடமாவது சொன்னால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று மிரட்டியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாணவியுடன் சென்ற அவரது நண்பரிடமும் பேசினோம். சிசிடிவி காட்சிகளைக் கண்டுபிடிக்க முயன்று வருகிறோம். ஆதாரங்களைச் சேகரிக்க தடயவியல் நிபுணர்கள் சம்பவ இடத்துக்குச் செல்வார்கள் என தெரிவித்தார்.

# பாகிஸ்தான் பொலிஸ் பயிற்சி மையத்தில் தற்கொலைத் தாக்குதல்; ஆறு பேர் பலி!




பாகிஸ்தானில் உள்ள ஒரு பொலிஸ் பயிற்சி மையத்தில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் ஆறு அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரின் எதிர்த் தாக்குதல்களில் தாக்குதல் நடத்த வந்த மூன்று தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடமேற்கு பாகிஸ்தானில் உள்ள ஒரு பொலிஸ் பயிற்சி மையத்தைக் குறிவைத்து பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையே கிட்டத்தட்ட 5 மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் மேலும் 13 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர் என்றும் அனைத்துப் பணியாளர்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று செய்திகள் தெரிவித்துள்ளன.

# சீன இறக்குமதிகள் மீது 100 வீத வரி; அமெ. ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு!

நவம்பர் 1 அல்லது அதற்கு முன்பாக, சீன இறக்குமதிகள் மீது கூடுதலாக 100 வீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “சீனாவில் பல விசித்திரமான விடயங்கள் நடக்கின்றன. உலகின் அனைத்து நாடுகளுக்கும் அவர்கள் கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதில், அரிய மண் தாதுக்களைக் கொண்ட சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் சீனாவில் உற்பத்தி செய்யப்படாத பொருள்கள் மீது ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதுபோன்ற ஒரு விஷயத்தை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். இது சந்தைகளை அடைத்துவிடும். உலகின் ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் இது வாழ்க்கையை கடினமாக்கும்.

சீனாவின் இந்த கடிதத்தால் மிகவும் கோபமடைந்துள்ள பல நாடுகள் எங்களை தொடர்பு கொண்டுள்ளன. கடந்த ஆறு மாதங்களாக சீனாவுடனான எங்கள் உறவு மிகவும் சிறப்பாக இருந்து வருகிறது. இதனால், சீனாவின் இந்த வர்த்தக நடவடிக்கை எங்களுக்கு கூடுதல் ஆச்சரியத்தை அளித்துள்ளது.

சீனா, உலகை சிறைப்பிடித்து வைத்திருக்க அனுமதிக்கப்படக்கூடாது. ஆனால், இதுவே அவர்களின் நீண்ட கால திட்டமாகத் தெரிகிறது. காந்தங்கள் மற்றும் பிற தாதுக்களை அவர்கள் மிகப் பெரிய அளவில் குவித்து வைத்திருக்கிறார்கள். இந்த விடயத்தில், அமெரிக்கா வலுவான ஏகபோக நிலையைக் கொண்டுள்ளது. அவற்றைப் பயன்படுத்த நான் முடிவு செய்யவில்லை.




வழக்கமாக இருந்த விஷயங்கள் இனி வழக்கமாக இருக்காது. இது தொடர்பாக நான் சீன அதிபரிடம் பேசவில்லை. ஏனெனில், பேசுவதற்கு எதுவும் இல்லை. இது எனக்கு மட்டுமல்ல, உலகின் அனைத்துத் தலைவர்களுக்கும் ஆச்சரியம்தான்.

இன்னும் இரண்டு வாரங்களில் தென் கொரியாவில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கைச் சந்திக்க இருந்தேன். ஆனால், இப்போது அதற்கு எந்த அவசியமும் இல்லை. மத்திய கிழக்கின் மூவாயிரம் ஆண்டு கால மோதல் மற்றும் சண்டை முடிவுக்கு வந்து அமைதி திரும்பிய நாள் இது. இந்த நாளில் சீன கடிதங்கள் பொருத்தமற்றவை.

இந்த விடயம் தொடர்பாக சீனா என்ன சொல்கிறது என்பதைப் பொறுத்து, அமெரிக்க அதிபராக எனது நடவடிக்கை இருக்கும். ஏகபோகமாக அவர்களிடம் என்ன இருக்கிறதோ, அது அமெரிக்காவிடம் இரண்டு மடங்காக இருக்கிறது. இப்படி நடக்கும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை. ஆனால், அதற்கான நேரம் வந்துவிட்டது.

வேதனையாக இருந்தாலும் இது அமெரிக்காவுக்கு நல்ல விஷயமாகவே இருக்கும். தற்போதைய நிலையில், நாங்கள் எடுத்துள்ள முக்கிய நடவடிக்கை, சீன பொருள்கள் மீதான வரிகளை அதிகரிப்பது. இதேபோல், வேறு சில எதிர் நடவடிக்கைகளும் தீவிர பரிசீலனையில் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

நவம்பர் 1 முதல் அல்லது அதற்கும் முன்பாக அமெரிக்கா, சீன பொருள்களுக்குக் கூடுதலாக 100 வீத வரியை விதிக்கும். ஏற்கனவே அவர்கள் செலுத்தும் வரியில் இது கூடுதல் வரியாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். ஏற்கனவே சீனப் பொருள்களுக்கு அமெரிக்கா 30 வீத வரி விதித்துள்ளது. அது தற்போது 130 வீதமாக உயர இருக்கிறது.



# இஸ்ரேல் – ஹமாஸ் இடையில் போர் நிறுத்தம்; ட்ரம்ப்புடன் உக்ரைன் ஜனாதிபதி உரையாடல்!

இஸ்ரேல் – ஹமாஸ் இடையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முயற்சியால் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை தொடர்பு கொண்டு பேசியுள்ளார் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக ஜெலன்ஸ்கி எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவில், “நான் ட்ரம்ப் உடன் தொலைபேசி மூலம் பேசினேன். அப்போது, இஸ்ரேல்– காசா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தை வெற்றிகரமாக முடித்ததற்காக வாழ்த்து தெரிவித்தேன்.

ஒரு பிராந்தியத்தில் போரை நிறுத்த முடியும் என்றால், உக்ரைன்– ரஷ்ய போர் உள்ளிட்ட மற்ற போர்களை உறுதியாக நிறுத்த முடியும்” எனக் கூறினார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்பிடம் உக்ரைனின் எரிசக்தி தளம் மீது ரஷ்யா தாக்குதல் நடத்துவதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அத்துடன், எங்களுக்கு ஆதரவு அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளது பாராட்டத்தக்கது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய உக்ரைன் மீது கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு முன் படையெடுத்தது. இன்னும் இரு நாடுகளுக்கு இடையிலான சண்டை முடிவுக்கு வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.10.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும்.




இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகள முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிபார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பராமரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிகரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.சூழ்நிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.10.2025




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையம் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும்.




இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றிக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.





# திஸ்ஸமகராம றப்பர்த் தோட்டத்தில் கார் விபத்தில் ஒருவர் படுகாயம்

**(உடப்பு க.மகாதேவன்)**

திஸ்ஸமகராம றப்பர்த்தோட்டம் பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் சாரதிக்குப் படுகாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் ரக கார் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் மின்கம்பம் உடைந்து வீழ்ந்தது. இந்த விபத்து நேற்று (11) ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.